முருகப்பெருமான் துணை

**மகான் இயற்பகை நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.09.2023,** ஞாயிற்றுக்கிழமை

1. மாதரும பலம்கொண்ட ஞானியே
மகானே ஆறுமுக அரங்கனே
ஆதரவாய் உன்பெருமை கூறி
அறிவிப்பேன் சோபகிருது தரிவை திங்கள்
2. திங்களிலே சப்தம திகதி கதிர்வாரம்
தேசிகன் கேட்க அறிவுரை ஆசிதனை
இங்கணமே இயற்பகை நாயனாரும்
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 07 ம் நாள், 24.09.2023, ஞாயிற்றுக்கிழமை)
இயம்பிடுவேன் உலகநலம் பெற
3. நலம்தரும் ஞானிகள் பூசையை
நாடெங்கிலும் மக்கள் செய்து
பலம்பெற வேண்டி அருளுகின்ற
பாடிடுவேன் அரங்கன் திருவடிபற்றி
4. பற்றியே தீட்சைதனை ஏற்று
பாருலகில் மக்கள் பின்தொடர
மாற்றம்தர அரங்கன் வகுத்த
மகாமந்திர தீட்சைமுதல் அடுத்தடுத்து
5. அடுத்தடுத்து அரங்கன் வரமாக
அருளுகின்ற அனைத்து தீட்சைகளும்
தடைபடா ஏற்று வணங்கி
தவமாக வழிபாடு செய்துவர
6. வருகவே தீட்சை பலமாக
வடிவேலனாரும் இறங்கி இனிதே
தருமகுணம் தயவுசிந்தை பெருக
தரணியோர்க்கு சக்தி கூடும்

7. கூடவே அரங்கன் தேடுகின்ற
குறைவிலா ஞானவான்களாக
நாடெங்கிலும் பெருகி இனிதே
ஞானிகள் ஆளும் ஆட்சிக் காலம்
8. காலமாக மாற்றம் கண்டு
கலியின் துன்பங்கள் ஓடும்
கோலமதாய் அரங்கன் வழி
குருவருளாக திருவருள் பெருகி
9. பெருகியே எங்கும் மாற்றம்
பேரானந்த ஞான வாழ்வாக
முருகப் பெருமான் தலைமை கொண்ட
முழுமை ஞானம் நிறைந்த
10. நிறைந்த மக்கள் படைசூழ்ந்த
நிலவுலகே ஆக அற்புதம்
குறைவின்றி கண்டு நன்கு
கூறிடுவேன் அஞ்ஞானவான்களும் மாறி
11. மாறியே அரசியல் களம் தனில்
மாற்றம் பல உண்டாகும்
அறிவிப்பேன் அரங்கன் தயவால்
அனைத்தும் ஞானபலம் ஆகும்

அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—